**O.S.No.225/2018**

**DW1 :** ஆறுமுகம் தேதி 27.3.2026

**பி.வாசா 1 சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு, வாதி தரப்பு குறுக்கு விசாரணை**

வாதியை எனக்கு 60 வருடமாக பழக்கம். சிறு வயதில் இருந்தே பழக்கன் ஆனவர்.அவரது தகப்பனார் செங்கோட கவுண்டரையும் எனக்கு தெரியும். செங்கோட கவுண்டர் கிரயம் வாங்கிய கிரய பத்திரத்தை நான் பார்க்கவில்லை. செங்கோட கவுண்டர் எவ்வளவு சொத்தை கிரயம் வாங்கியிருக்கிறார் என்பதை நான் தெரிந்து கொண்டேன். தாவா சொத்து விபரம் சரிதான். வா.சா.ஆ.5 26.02.1969 ம் தேதிய பத்திரத்தை தவறு என்று சொல்கிறேன்.எதனால் தவறு என்றால் விஸ்தீரணம் தவறு என்று சொல்கிறேன். அந்த பத்திரம் தவறு என்று அதன் பேரில் நடவடிக்கை எடுத்தேனா என்றால் எனக்கு தேவையில்லை என்பதால் நான் எடுக்கவில்லை. என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் மேற்படி 26.02.1969 ம் தேதிய பத்திரம் செல்லாது என்று சொல்லியிருக்கிறேனா என்றால் சாட்சி பிரமாண வாக்குமூலத்தை படித்து பார்த்து விட்டு, அவ்வாறு சொல்லவில்லை என்று கூறினார். என் அப்பா தனியாக கிரயம் வாங்கியிருக்கிறார், பொதுவில் வாங்கவில்லை. என்னிடம் காட்டப்படும் பி.வா.சா,ஆ.1 முதல் 3 ஆவணங்களான என்னுடைய ஆவணத்தில் சொத்துக்கள் பொதுவில் பாதி என்று தான் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். 4 வது ஆவணத்திலும் பொதுவில் பாதி என்று செக்குபந்தியுடன் வாங்கியுள்ளார். நாங்கள் கறார் செய்து கொண்டதில் செங்கோட கவுண்டரையும், வாதியையும் சேர்க்கவில்லை, அவர்களை சேர்க்க வேண்டிய அவசியம் இல்லை. 1961 ல் கிரயம் வாங்கிய போது முந்தைய கிரயதாரர்களுக்கு இடையே பாகக்கறார் ஆகவில்லை. செங்கோட கவுண்டருடன் என் தகப்பனார் கறார் செய்து கொண்டாரா என்றால் இல்லை,கறார் செய்து கொள்ளவில்லை. நீதிமன்றத்தில் பி.வா.சா.ஆ.5 ன்படி நானும், 4 ம் பிரதிவாதி லோகநாதனும் கறார் செய்து கொண்டோம். வருவாய்துறை ஆவணங்கள் எதுவும் நான் தாக்கல் செய்யவில்லை. அந்த வருவாய்துறை ஆவணங்கள்

அனைத்தும் கூட்டு பங்குதாரர்களுடன் பொதுவில் உள்ளது என்றால் சரிதான். பொதுவில் இருப்பதால் நான் வருவாய்துறை ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.